# TVGM தலைமை அலுவலகம், சோமரசம்பேட்டையில் கட்டுவதற்கு தேவன் வழிநடத்திய சாட்சிகள்

கர்த்தருடைய கிருபையினால் 1988 ஜனவரி 25 திங்கள் காலையில் நானும், சகோதரி. ஜெயசீலியும் விராலிமலை யூனியனில் "100 கிராம ஊழியம்" நடத்த பாரப்பட்டியை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தோம். அப்பொழுது இனாம் குளத்தூர் என்ற இடத்திற்கு அருகில் சென்று கொண்டிருக்கும் பொழுது, ஆலயமில்லாத ஒரு கிராமத்திற்கு "டி.வி.ஜி.எம். தலைமை அலுவலகத்தை" மாற்ற வேண்டுமென்ற ஒரு எண்ணம் உருவானது.

உடனே பாரப்பட்டியில் 1988 ஜனவரி 25 திங்கள் உபவாச ஜெபத்தில் 100 கிராம ஊழியர் மத்தியில் என்னுடைய எண்ணத்தைப் பகிர்ந்து கொண்டு ஜெபிக்கச் சொன்னேன்.

1. திருச்சி அருகிலுள்ள "100– கிராம ஊழியம்" நடைபெற்ற ஒரு யூனியனில் ஆலயமில்லாத ஒரு கிராமமாக இருக்க வேண்டும்.

2. T.T.I மாணவரும், அலுவலகத்தில் உள்ளவர்களும், கிராம மக்களும் ஞாயிறு ஆராதிக்க ஒரு TVGM ஜெபவீடு உருவாக்க வேண்டும்.

3. TVGM அலுவலகமும், ஜெபவீடும், T.T.I பயிற்சி நிலையமும் ஒரே காம்பவுண்டில் அமைய வேண்டும்.

4. பிரிண்டிங் கிரஸ், லாரிசெட், போஸ்ட் ஆபிஸ், மார்க்கெட், பள்ளிக்கூட வசதி 1 கி.மீட்டர் தூரத்திற்குள்ளாவது இருக்கவேண்டும். திருச்சி பஸ் ஸ்டாண்டிலிருந்து 3 கி.மீ சுற்றளவுக்குள் டவுண் பஸ் வசதியுடன், டெலிபோன் வசதியுடன் இருக்க வேண்டும், தண்ணீர் வசதியுள்ள இடமாக இருக்கவேண்டும் என்ற அத்தனை அத்தியாவசிய தேவைகளை நினைவுகூர்ந்து ஜெபிக்க ஆரம்பித்தோம்.

5. மேலும், 1 ஏக்கர் நிலம் அதோடு கட்டடம் டி.வி.ஜி.எம். பெயரில் கர்த்தர் கொடுக்கும்படியாய் ஜெபித்தோம். அப்பொழுது கர்த்தர் "**இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்**"– என்ற வசனத்தை நினைவுபடுத்தினார்.

ஆண்டவரே இது உம்முடைய சித்தமாக இருந்தால், 88 பெப்ரவரி 29 திங்கள் கொடைக்கானல் 100–கிராம ஊழிய முகாமுக்கு முன்னால், எங்களுக்கு ஒரு அடையாளத்தைக் காண்பியும் என்று கேட்டுக் கொண்டேன். சுமார் 30 நிமிடம் இந்த குறிப்புகளுக்காக விசேஷ ஜெபம் ஏறெடுத்தோம். இதற்கு முன்பு ஒரு நாளாவது டி.வி.ஜி.எம். தலைமை அலுவலகத்தை "**ஆலயமில்லாத கிராமத்திற்கு**" மாற்ற வேண்டுமென்று நான் நினைத்ததும் கிடையாது. ஜெபித்ததும் கிடையாது. 1988 ஜனவரி 25ல் தான் மாற்ற வேண்டும் என்ற எண்ணம் முதல் முறையாக உருவாகியது.

## குடியிருக்கும் வீட்டை காலி செய்யும் நோட்டீஸ்

இப்படியிருக்கும் பொழுது 88 ஆம் ஆண்டு பெப்ரவரி 9 ஆம் தேதி என்னுடைய வீட்டு உரிமையாளர் அவர்கள் 15.5.88 ( 3 மாத நோட்டீஸ் ) க்குள் வீட்டை காலி செய்யும்படி குறிப்பிட்டிருந்தார்கள்.

இச்சம்பவத்தை கேள்விப்பட்டு, திருச்சி, குமரன்நகர் திரு. செல்லப்பா அவர்கள் தன்னுடைய வீட்டின் மேல் மாடியை வாடகைக்கு தருவதாக சகோதரி. ஜெயசீலிக்கு போன் பண்ணியிருந்தார்கள். ஆனால், என் மனம் இனிமேல் வாடகை வீட்டுக்கு திருச்சிக்குள் செல்வதை விரும்பவில்லை. ஆனாலும், கட்டிடத்திற்கென்று ஒரு பைசா கூட நாங்கள் சேமித்து வைக்க வில்லை. இதே நேரத்தில் வாடகை வீட்டையும் விரும்பவில்லை.

ஏனெனில் ஏற்கனவே டி.வி.ஜி.எம் ஆரம்பித்தது முதல் இது வரை 6 வீடு மாறி, மாறி வந்ததால், அரசாங்கம் மற்றும் பத்திரிக்கை ரிஜிஸ்ட்ரேஷன் உள்பட 10 அரசாங்க அலுவலகங்களில் முகவரிகளை மாற்றுவதில் மிகுந்த சிரமத்துடன் இருந்தேன். ஆதலால் கர்த்தரிடத்திலிருந்து ஒரு அற்புதத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

ஆதலால் கர்த்தருடைய கிருபையினால், 1988 பெப்ரவரி 22 முதல் 28 முடிய 7 நாட்கள் மட்டும் தண்ணீர் மட்டும் குடித்துக் கொண்டு, தேனீ மாவட்டம், பண்ணைபுரத்தில், தட்சணாமூர்த்தி ஐயா ஜெபவீட்டில் உபவாசித்து ஜெபிக்க கர்த்தர் கிருபை செய்தார்.

விசேஷமாக டி.வி.ஜி.எம் தலைமை அலுவலகம் பின்வருமாறு அமையும் படியும் மற்றும் பல காரியங்களுக்காகவும் ஜெபித்தேன்.

டி.வி.ஜி.எம் தலைமை அலுவலகம்

1. TVGM Prayer House 2. TVGM Retreat Hall

3. Rest House for God’s Children

4. TVGM Staff Quarters 5. TVGM office

6. TVGM Training Institute 7. TVGM Publication Office

மேற்கண்ட 7 அமைப்புகளும் டி.வி.ஜி.எம் தலைமை அலுவலகத்தில் ஒன்றாக இருக்க வேண்டும் என ஜெபித்தேன்.

மீண்டும் கர்த்தருடைய கிருபையினால், 1988 ஏப்ரல் 28 வியாழன் காலை 8 மணி முதல் ஏப்ரல் 30 சனி முடிய 3 நாள் இரவும், பகலும் தண்ணீர் மட்டும் குடித்துக் கொண்டு 20 பேர் உபவாசமிருந்து டி.வி.ஜி.எம் – 9வது ஆண்டு நிறைவு விழா ஸ்தோத்திர கூட்டத்தை என்னோடு கூட அதவத்தூர் என்ற ஆலயமில்லாத கிராமத்தில் அனுசரித்தார்கள்.

1988 மே 1 ஞாயிறு அன்று மாலை சுமார் 20 பேர் புத்தூர் ஏ.ஜி சபையிலிருந்து பாஸ்டர். நார்மன் பாஸ்கருடன் அதவத்தூர் வந்து எங்களை உற்சாகப்படுத்தினார்கள்.

மிக முக்கியமாக 4 குறிப்புகளுக்காக ஜெபமும் தீர்மானமும் ஏறெடுக் கப்பட்டது. பின்வரும் தீர்மானம் மிக முக்கியமான ஒன்றாகும். கடந்த 9 ஆண்டுகளாக தமிழ்நாட்டிலே உள்ளவர்களிடமும், வெளிநாட்டில் உள்ள தமிழ்நாட்டினரிடமும் மட்டுமே காணிக்கை பெற்று வந்தோம். தமிழர் அல்லாதவர் யார் கொடுத்தாலும் அந்தக் காணிக்கையை டி.வி.ஜி.எம் அன்று வரை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஆனால் 29.4.1988 முதல் எல்லா நாட்டினரது காணிக்கைகளையும் ஏற்றுக்கொள்ளலாம் என்ற தீர்மானத்தை ஏடுத்துக்கொண்டோம்.

ஆனாலும் Foreign Aid will not be accepted - என்ற கொள்கையில் உறுதியாக இருக்க தீர்மானம் எடுத்தோம்.

தமிழ் நாட்டில் நடைபெறும் கிராம ஊழியத்தை தமிழ் நாட்டினரே ஜெபத்துடன் தாங்குவோம். – என்ற வாசகத்தை 100 – கிராம ஊழியம் பத்திரிக்கையில் அடிக்கடி வெளியிட்டு, உற்சாகப் படுத்த வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

மேலும், டி.வி.ஜி.எம் க்கு கர்த்தர் சொந்தமாக 1 ஏக்கர் நிலத்தை கொடுக்கும்படியாக விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. அதற்குரிய 5 ரசீது நன்கொடைப்புத்தகம் நோட்டீஸ்களும் பிரதிஸ்டை செய்யப்பட்டது. குறிப்பாக ரூ 1000 அல்லது அதற்கு அதிகமாக கொடுக்கக்கூடிய அல்லது வசூலிக்க கூடிய 100 பேரை கர்த்தர் எழுப்பவேண்டும் என விசேஷ ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.

தற்சமயம் திருச்சியில் குமரன் நகரில் நாம் இருக்கும் வீட்டிற்கு 6 கி.மீ தொலைவில் அதவத்தூர் என்ற ஆலயமில்லாத கிராமத்தின் வெளிப்புறம் 1 ஏக்கர் 5 செண்ட் நிலம் இருப்பதாகவும், 1லட்சம் ரூபாய் சொல்வதாகவும், நில உரிமையாளர் யார் என்று தெரியவில்லை என்று கூறி ஒரு கர்த்தருடைய பிள்ளை அந்த இடத்தை நேரடியாக கொண்டு போய் காட்டினார்.

முதலாவதாக டி.வி.ஜி.எம் அலுவலகத்தில் பணிபுரியும் சகோதரிகள் புதன் கிழமை உபவாசித்து அந்த நிலத்தில் கால் வைத்து ஜெபித்தோம். அதவத்தூர் ஊழியர் தாமஸ் ஜெபித்தார்கள்.

இரண்டாவதாக 100 – கிராம ஊழியர் 3 நாள் உபவாச பண்டிகையை அந்த நிலத்தில் கொண்டாடினார்கள். பாஸ்டர். நார்மன் பாஸ்கர், டிப்டி கலைக்டர் ஏர்னஸ்ட் லின்டோன் திரு. செல்லப்பா, பாஸ்டர் பெனியேல் யாவரும் ஜெபித்தார்கள்.

மூன்றாவதாக சுவிசேஷகர் நெல்லை ஜெபராஜ் 6.5.1988 வெள்ளி அன்று அந்த நிலத்தில் வந்து ஜெபித்தார்கள்.

அன்றுதான் முதல் முறையாக வீட்டு நில சொந்தக்காரர் பெயர் அதவத்தூர் திரு. மொட்டையன் என அறிந்தோம். அல்லேலுயா. கர்த்தர் எங்கள் உள்ளத்தில் ஏவினபடியால் டி.வி.ஜி.எம் க்கு சொந்த நிலம் வாங்க நானும் என் மனைவியும் சேர்ந்து முதல் காணிக்கையாக ரூ 1000 போட்டு 8.4.1988 அன்று சோமரசம்பேட்டையில் ஒரு பாங்க் கணக்கு ஆரம்பித்தோம். இதைத் தொடர்ந்து பாஸ்டர். நார்மன் பாஸ்கர் தானாக ரூ 1000 ரொக்கமாக 10.5.1988 அன்று நிலம் வாங்க கொடுத்தார்கள்.

மூன்றாவதாக பிஷப் கல்லூரி புரோபசர் இம்மானுவேல் அவர்கள் தானாகவே ரூ 1000 கொடுப்பதாக வாக்குப் பண்ணினார்கள் இன்னும் நிலம் அட்வான்ஸ் கொடுக்கவும் இல்லை. நிலம் உரிமையாளரை சந்தித்து பேசவும் இல்லை. விற்பது உண்மைதானா என்று தெரியவும் இல்லை. சகலமும் விசுவாசத்தினாலே நடைபெற்று வந்தது.

காரியம் இப்படியாயிருக்க, 14.5.88 நாள் வந்தது. சொந்த வீடும் கிடைக்கவில்லை. வாடகை வீடும் கிடைக்கவில்லை. மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தபோது வீட்டு உரிமையாளர் காலையில் வந்து திட்ட ஆரம்பித்தார்கள். அப்படிப்பட்ட நேரத்தில் குமரன் நகரில் இருந்து திரு. செல்லப்பா அவர்கள், கணவனும் மனைவியுமாக வந்து எங்களை விசாரித்து, அன்றைக்கே அவர்களுடைய வீட்டு முதல் மாடியில் வந்து குடியிருக்க வாருங்கள் என்றார்கள். வேறு வழியில்லாமல் பொருட்களை தூக்கி சென்றோம்.

திரு. செல்லப்பா அவர்களுடைய வீட்டு முதல் மாடி மிகச் சிறிய அறையாக இருந்தபடியினால் எங்கள் தேவைக்கு போதவில்லை. வீட்டு பீரோக்கள் எல்லாமே வராண்டாவிலேயே வைக்கப்பட்டு, மழை, காற்றினாலே பாதிக்கப்படகூடிய அளவில் இருந்தது. ஆதலால் எங்களுக்காக தங்கள் வயதான காலத்தில் கூட இரண்டாவது மாடி கட்டி, டி.வி.ஜி.எம். அலுவலகம் நடத்த ரூ 500 குறைந்த வாடகையில் தந்தார்கள். அதுவும் போதவில்லை.

ஆதலால் என்னுடைய மனைவி அலுவலகம், உறாஸ்டல் வீடு, அனைத்திற்கும் சேர்த்து பெரிய வீடாக எடுக்கும்படி கூறினார்கள். அவர்கள் வாஞ்சை படியே ரூ 2000 மாத வாடகையில் பெரிய வீடு எங்கள் தேவைக்கு ஏற்ப குமரன் நகரில் உள்ள அடுத்த தெருவிலேயே கர்த்தர் கிருபையாக தந்தார். அல்லேலுயா.

இதே நேரத்தில் டி.வி.ஜி.எம் – க்கு சொந்த நிலம் வாங்குவதில் தீவிரமாக ஜெபத்துடன் முயற்சி செய்தோம்.

திருச்சி பஸ்ஸ்டாண்டிலிருந்து 7 கி.மீ தூரத்தில் அதவத்தூர் என்ற ஆலயமில்லாத கிராமத்தில் ஒரு ஏக்கர் நிலம் ஒரு லட்சம் ரூபாயாக இருக்கிறது என்று கேள்விப்பட்டதினால் கர்த்தருக்கு சித்தமானால் அதை கொடுக்கும்படி உபவாசித்து ஜெபித்து கொண்டே இருந்தேன்.

ஆனால், அந்த வாரத்தில் திரு. மொட்டையன் அவர்களை நண்பர் ஒருவர் சந்தித்து நிலத்தை விலைக்கு கேட்டபொழுது விலைக்குதரவில்லை என்று கூறிவிட்டார்.

ஆதலால் கர்த்தர் எந்த இடத்தை காட்டினாலும், டி.வி.ஜி.எம் தலைமை அலுவலகத்தை அமைக்க நிலம் வாங்க ஆயத்தம் என ஒரு நோட்டீஸ் அடித்து, அதவத்தூர் திரு. மொட்டையன் நிலத்தை வாங்க முடியாத உண்மை நிலையை தெளிவாக எழுதி ஜெபிக்கும்படியாக ஒரு நோட்டீஸ் அடித்து திருச்சி, புத்தூர் YMCA முன்னால் நின்று கொடுத்துக்கொண்டே இருந்தேன்.

திடீரென்று ஒரு நாள் ஒரு சகோதரன் தன்னிடத்தில் 56 சென்ட் நிலம் சோமரசம்பேட்டையில் இருப்பதாகவும், குறைந்த விலைக்கு ஊழியத்திற்கு கொடுப்பதாகவும் எழுதியிருந்தார்கள்.

அதே வீட்டு விலாசத்திலிருந்து ஒரு சகோதரியும் மேற்கண்ட காரியத்தை ஒரு போஸ்ட் கார்டில் எழுதியிருந்தார்கள். நானும் என் மனைவியும் இந்த இரண்டு போஸ்ட் கார்டையும் வைத்து ஜெபித்து விட்டு குமரன் நகரலிருந்து சோமரசம்பேட்டைக்கு விசாரிக்க வந்தேன். கணவன் தபால் எழுதியது மனைவிக்கு தெரியாது. மனைவி எழுதியது கணவனுக்கு தெரியாது. அவர்களுடைய இருவருடைய உள்ளத்திலும் பரிசுத்த ஆவியானவர் ஒருமனம் கொடுத்து எழுத வைத்திருந்தார். அல்லேலுயா.

கர்த்தருடைய கிருபையினால் 56 செண்ட் நிலத்தை ரூ.51,240/-க்கு குறைந்த விலைக்கு தருவதற்கு முன் வந்தார்கள். நாங்களும் விசுவாசத்தினால் சம்மதித்தோம். இதற்குள்ளாக, கொஞ்சம் கொஞ்சமாக நிலத்திற்கென்று காணிக்கை சேகரித்து வைத்திருந்தோம். அட்வான்ஸ் கொடுக்க போதுமானதாக இருந்தது.

கர்த்தருடைய கிருபையினால் 1989 ஜூலை 3-ம் தேதி அன்று ரூ.16,240/- கொடுத்துவிட்டு 6 மாதத்திற்குள் அதாவது, 1989 டிசம்பர் 31-க்குள் மீதி பணம் ரூ.35,000/-ஐ கொடுத்துவிடுவதாக கூறி, கிரயப்பத்திரம் **தமிழ் வில்லேஜ் காஸ்பல் மிஷன்** பெயரில் எழுதி முடித்துவிட்டோம். மிகவும் ஆச்சரியமாய் இருந்தது. பணம் கொடுக்காமலேயே அக்ரிமெண்ட் ஒன்று எழுதி வாங்கிக் கொண்டு சகோதரன் இருதயராஜ் நிலத்தை கர்த்தருடைய ஊழியத்திற்கு தந்துவிட்டார். அல்லேலூயா!

இப்படியிருக்கும்பொழுது, சென்னையிலுள்ள ஒரு சகோதரன் ஒரு கடிதம் டி.வி.ஜி.எம்—க்கு ஜெபிக்கும்படி மிகவும் மன வேதனையோடு எழுதியிருந்தார்.

தான் வெளிநாட்டில் நல்ல வேலையிலிருந்து கை நிறைய சம்பாதித்ததாகவும், ஆனால் பில்லி சூனியகட்டினால் வேலையை இழந்து தற்சமயம் வீட்டில் உள்ள பொருட்களை விற்று சாப்பிடுவதாகவும், வெளிநாட்டிலிருந்து வரும்பொழுது, ரூ.6000 கடன் வாங்கி வந்ததாகவும், திரும்பி வெளிநாடு செல்ல ரூ.5000 இல்லாமல் அவதிப்படுவதாகவும் கர்த்தர் ஒரு அற்புதத்தை செய்யும்படியாகவும் எனக்கு தபால் எழுதியிருந்தார்.

குறிப்பாக, டி.வி.ஜி.எம். ஊழியத்தைப் பற்றி நல்ல சாட்சி கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ரூ.100/— கூட என்னால் காணிக்கை அனுப்ப முடியாத சூழ்நிலையில் இருப்பதால் திருச்சிக்கு வரவில்லை. எனக்காக ஜெபியுங்கள் என எழுதியிருந்தார்.

டி.வி.ஜி.எம். தலைமை அலுவலக சகோதரிகள் கருத்தாய் ஜெபித்தார்கள். நானும் ஜெபிக்கச் சென்றபோது, கர்த்தர் இந்தப் பணம் ரூ.5000/—ஐ நீயே கொடு என்று என்னுடன் பேசினார். ஆனால் கர்த்தர் என்னுடன் உணர்த்தின இந்த நாளில் டி.வி.ஜி.எம்—ல் ரூ.65000/— கடன் இருந்தது. எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. மனைவியிடம் பகிர்ந்து கொண்டேன். அவளும் நமக்கு எவ்வளவோ கடன் இருக்கிறதே என்றாள். கர்த்தாவே, நீர் பேசினது உண்மையானால் ஒரு அற்புதத்தை செய்யும் என்று ஜெபித்தோம். திடீரென்று ஒரு கர்த்தருடைய பிள்ளை 3வது நாளில் ரூ.5000/— காணிக்கை அனுப்பியிருந்தார்கள். நானும் என் மனைவியும் ஜெபித்து, சென்னையில் அந்த சகோதரன் வீட்டில் கொண்டுபோய் கொடுத்தோம்.

இந்த சம்பவம் நடந்த ஒரு வாரம் கழித்து என்னுடைய மனைவியின் உடன் பிறந்த சகோதரி அரபு தேசத்தில் குவைத்திலிருந்து போன் செய்து உங்களை அநேகர் குவைத்துக்கு அழைக்க விரும்புகிறார்கள். ஆதலால் விசா எடுக்க முயற்சிக்கப்போகிறோம். உங்கள் பாஸ்போட்டை அனுப்பி வையுங்கள். நீங்களும் ஜெபியுங்கள் என்றார்கள்.

திடீரென்று ஒருநாள் விசா கிடைத்துவிட்டதாகவும், ஆகாய விமான டிக்கட் போக வர எடுத்துவிட்டதாகவும், தன்னுடைய வீட்டில் தங்கி சாப்பிட்டுக் கொள்ளலாம் எனவும் மற்றும் ஒரு அண்ணியின் மூலம் சொல்லி, விசாவையும், டிக்கட்டையும் நாசரேத்துக்கு கொடுத்து அனுப்பியிருந்தார்கள். டிக்கட் போக வர ரூ.12,000/— எனவும், நான்கு பேர் டிக்கட் எடுக்க பண உதவி செய்தார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தார்கள்.

ஆனாலும், ''***அண்ணா மாவட்டம் இயேசுவுக்கே***'' திட்டத்தின் கீழ் 100—நாள் ஊழியம் நடந்து கொண்டு இருந்தபடியால் ஊழியம் முடிந்த பின்புதான் வருவேன் என்று சொல்லிவிட்டேன்.

கர்த்தருடைய பெரிதான கிருபையால டி.வி.ஜி.எம். காணிக்கைப் பணத்தில் ஒரு பைசா கூட எடுக்காமல், சென்னை சென்று பாஸ்டர். சார்லஸ் ஆரோன் அவர்கள் ஏ.ஜி. சபையில் செய்தி கொடுத்துவிட்டு குவைட் புறப்பட்டேன். சுகமாக போய் சேர்ந்தேன்.

2 கிறிஸ்தவ ஆலயங்களிலும், 5 ஜெபக்கூட்டங்களிலும் 15 வீடுகளிலும் கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. சில இடங்களில் இரண்டு, மூன்று முறை அழைத்தார்கள். வீடியோக்கள் எடுத்தார்கள். 25 நாட்கள் தினமும் மாலையில் 1 மணி நேரம் தொடர்ச்சியாக கர்த்தருடைய சாட்சியும் கொடுக்க தேவன் கிருபை செய்தார்.

இதைத் தொடர்ந்து 5 நாட்கள் பகரின் சபையில் செய்தி கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார்.

தமிழ் நாட்டிலுள்ள அநேக விசுவாசிகளை குவைட்டிலும், பகரினிலும் சந்திக்க கர்த்தர் கிருபை செய்தார். எல்லாரும் மனநிறைவுடன் நிலம் வாங்குவதற்கு காணிக்கைத் தந்தார்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையால், 31.12.89–க்குள் பாக்கித் தொகை ரூ.35,000/– தருவேன் என்று விசுவாசத்தினால் வாக்குக் கொடுத்த தொகையை கர்த்தர் கிருபையாக 17.08.89 தேதிக்குள் எந்தவித பாக்கியும் இல்லாமல் கொடுத்து முடிக்க கிருபை செய்தார். தேவனுக்கே மகிமை! கர்த்தருடைய கிருபையினால் ஒரு சிறிய ஓலைகூரை ஷெட் ஊழியர் தங்கி, வேலை செய்வதற்காக முதலாவது கட்டப்பட்டது.

கர்த்தருடைய பெரிதான கிருபையாலும் இரக்கத்தாலும் 1990 மார்ச் 10,11 இரண்டு தினங்களும் உபவாச ஜெபம் சோமரசம்பேட்டை டி.வி.ஜி.எம் நிலத்தில் கூரைஷெட்டில் நடைபெற்றது. முதல் நாள் 29 பேரும், இரண்டாம் நாள் 26 பேரும் ஞாயிறு மாலை விசுவாசத்தினால் அஸ்திபாரத்திற்கு முதல் மண் தோண்டும் வைபவத்தில் சுமார் 45 பேரும் கலந்துகொண்டார்கள்.

சுசீந்திரம் கல்லூரி விரிவுரையாளர் ஒரு கர்த்தருடைய பிள்ளை நிலத்தில் வந்து ஜெபித்து, முதல் காணிக்கையாக ரூ.500/– கொடுத்து, எங்களோடு 1 நாள் உபவாசித்து, ஜெபத்தை நடத்தித் தந்து, இரண்டு செய்தியும் கொடுத்தது எங்களுக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. அநேக ஏழை எளிய விசுவாசிகள் ரூ.5,10,20 என்று என்னுடைய கையில் கொடுத்ததைப் பாத்து மிகவும் சந்தோஷப்பட்டேன். அவர்களுடைய பெயரை எழுதாவிட்டாலும் கர்த்தர் அவர்களை ஆசீர்வதிக்கும்படி கருத்தாய் ஜெபியுங்கள். அநேக கர்த்தருடைய பிள்ளைகளின் ஜெபக்குறிப்புகள் ஜெபிக்கப்பட்டது.

இந்த உபவாச ஜெபத்தில் காலையில் நடைபெற்ற முதல் ஞாயிறு ஆராதனையில் **சகோதரி ஜெசுபாய் சுகந்தம்** அவர்கள் 2 பவுண் கல் காப்பு ஒன்று கட்டட நிதிக்கென்று பெயர் சொல்லவேண்டாம் எனக்கூறி காணிக்கையாக வழங்கினார்கள். ஆனாலும் என்னால் கர்த்தர் கிரியை செய்த ஆத்துமாக்களின் பெயர்களை சொல்லாமல் இருக்கமுடியவில்லை. ஆகமொத்தம் அன்று வரையிலும் வந்த மொத்த காணிக்கை ரொக்கமாக ரூ.20 ஆயிரம் இருந்தது. ஆதலால் **20 ஆயிரம் ரூபாயையும் 1 காப்பையும் சேர்த்து,** வைத்து கர்த்தர் ஆசீர்வதிக்கும்படி யாவரும் ஜெபித்தார்கள்.

இதுவே, நம்முடைய **டி.வி.ஜி.எம். தலைமை அலுவலகம் கட்டட மூலதனமாக** உள்ள பணமாக இருந்தது. அல்லேலூயா! முதல் ஜெபத்திலும் கடைசி ஜெபத்திலும் ஆசீர்வாத மழை பெய்தது.
பாஸ்டர். சேம்பியன் செய்தி அளித்தார்கள். ஸ்ரீரங்கம் பாஸ்டர். ராஜேந்திரன், சீலோவாம் பாஸ்டர். சின்னப்பன் திருத்துறை பூண்டியிலிருந்து ஓடோடி வந்து ஜெபித்தது மகிழ்ச்சியாக இருந்தது.

இரவு தங்க சோமரசம்பேட்டை திரு. குழந்தைசாமி தன்னுடைய வீட்டை தந்தார்கள். திருச்சி, ஆர்க்கிடெக்ட் சகோ. ராஜாசிங் தியோடர் அவர்கள் புளூ பிரிண்ட் காணிக்கையாக இலவசமாக வரைந்து தந்தார்கள். அந்த வரைபடத்தின்படி, வெள்ளை சுண்ணாம்பு வைத்து, செவ்வக வடிவத்தில் எல்லைக்கோடு போட்டு டி.வி.ஜி.எம் தலைமை அலுவலக சகோதர சகோதரிகளும் மற்றும் உபவாசத்தில் கலந்துகொண்ட பிள்ளைகளும், விசுவாசத்துடன் ஜெபித்தார்கள். தேவாதி தேவன் தம்முடைய சித்தத்தை இவ்வாறாக நிறைவேற்றினார்.

அதற்குப் பின்பு சில முக்கியமான வேலைகள் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றது. இதற்காக கர்த்தரைத் துதியுங்கள். 1. தற்காலிகமாக கட்டப்பட்டிருந்த ஓலை ஷெட்டில் TVGM தலைமை அலுவலக வீட்டிற்கு நம்பர் 4/211– A என வாங்கப்பட்டது. 2. ஓலை குடிசைக்கு தற்காலிகமாக வயரிங் செய்யப்பட்ட, மின்சாரம் வழங்க விண்ணப்பம் செய்யப்பட்டது. 3. TVGM தலைமை அலுவலக கட்டடம் (புளூ பிரிண்ட்) க்கு மணிகண்டம் B.D.O அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அப்ரூவலுக்காக விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தது. பீஸ். ரூ.9668.00 செலுத்தப்பட்டு, 22.05.90 அன்று அப்ரூவல் ஆகி வந்தது. ஆனாலும், இந்தத் தொகை பெரிதாக இருந்தபடியாலும், நிரந்தர கட்டத்திற்குரிய பெரிய பிளானாக இருந்தபடியாலும் இந்த இடத்தில் கட்டடம் கட்டப்படாமல் வேறு இடங்களில் சிறுசிறு கட்டடமாக கட்டப்பட்டு, உபயோகிக்கப்பட்டு வந்தது.

கர்த்தருடைய கிருபையினால், கடந்த 3 ஆண்டுகளாக இந்த புளூ பிரிண்ட் படி, கட்டடம் கட்ட ஆரம்பிக்கப்பட்டு, மூன்றில் இரண்டு பகுதி மிகவும் நேர்த்தியான முறையில் கட்டப்பட்டு 01.05.2004 சனி கிழமை கர்த்தருடைய மகிமைக்கென்று சென்னை Anglican Church of India Bishop Dr. John Sathiya Kumar, அவர்களால் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை.!